1973 டிசம்பர் 3]

ஆண்டுக்கான மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில் சைதாப் பேட்டை ரிச்சர்டு பூங்கா கிணற்றிலிருந்து சலவையாளர் கிணற்றுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் சலவைத் தொழிலாளர்கள் கீழ்ப்பாக்கம் நீர்நிலையத் திலிருந்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும், துணிகளைப் பாதுகாக்க சுற்றுச் சுவர் வைத்துக் கொடுக்க வேண்டு மென்றும் கேட்டு மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில் அடுத்த வருஷம் தகுந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது சுற்றுச் சுவர் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்பந்தத்தில் சில தடைகள் ஏற்பட்டு ஒருவாறு கட்டி முடிக்கப்பட்டது. புயலால் ஆர்.சி. கூரைகள் பாதிக்கப்பட்ட நேரத்தில் தங்க வசதியின்றி வீடின்றி இருந்தவர்கள் அந்தக் கட்டடத்தில் குடிபுகுந்தனர். மிக்க சிரமத் தோடு அங்கு தங்கியிருந்த மக்கள் அகற்றப்பட்டார்கள். தண்ணீர்ப் பற்றுக்குறையின் காரணமாக கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து தண்ணீர் வசதி அளிக்க இயலாத நிலை இருந்தது. இப்போது தண்ணீர் வசதியில் முன்னேற்றம் ஏற்பட்டு தற்போது தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அதைப் பற்றிக் குறிப்பில் இருப்பதைச் சொல்லியிருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் பார்வையிடத் தயாராக இருக்கிறேன்.

திருப்புவனம் ஒன்றிய அலுவலர்களுக்குக் குடியிருப்புகள்.

*** 593 வினு—திரு. த. சோணையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் அலுவலர்களுக்கு 1973-74-ல் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா: திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் அலுவல் செய்யும் அலுவலர்கள் வீடு வாடகைக்கு கிடைக்காமல் அவதிப்படுகிருர்கள். வேறு சில ஊராட்சி ஒன்றிய அலுவலர்

களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதைப்போல உடனடியாக அடுத்த ஆண்டிலாவது திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழ்நாட்டில் உள்ள 374 ஒன்றியங்களில் இன்னமும் அலுவலர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்ட ஒன்றியங்கள் 180 இருக்கின்றன. அந்த 180 ஒன்றியங்களில் திருப்புவனம் ஒன்று. இந்த ஒன்றியங்களுக்கு படிப்படியாகத்தான் அலுவலர்கள் குடியிருப்பு கட்டப்படும்.

Meeting of Electricity Board and World Bank Officials.

* 594 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the World Bank Team had meetings with the representatives of the State Electricity Board in June 1972; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) விவாதத்தின்போது, அரசுக்கு மின்சார வாரியம் செலுத்தவேண்டிய வட்டி நிலுவைகளைத் தள்ளி விடுதல், தேய்மான நிதியைக்கடன் கரைப்புக்காகப் பயன்படுத்திக்கொள்ளுதல், கிராம மின் இணைப்புத் திட்டங்களுக்காக அரசு உதவித்தொகை அளித்தல், மின்சார வாரியத்துக்குக் கிடைக்கவிருக்கும் வருவாய் ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : May I know whether the Government have also discussed with the representatives the inordinate delay in the supply of certain important parts which require foreign exchange to the Kalpakam Plant by the Canadian Company? If there is delay, may I know whether the Hon. Minister had discussed with the World Bank Team as to how to set at naught this delay and rectify things?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் கூறியபடி இந்த மூன்று விஷயங்கள்தான் விவாதிக்கப்பட்டன. மேற்கொண்டு விவாதிக்கப்படவில்லை.